5th September 1960]

Kandaparichan drainage canal

*432 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை ஜில்லாவிலுள்ள கந்தப்பறிச்சான் ஆற்று வடிகால் வெட்டும் வேலை எப்போது துவக்கப்பட்டது ?

(ஆ) இப்போது அந்த வேலை நின்றிருக்கிறதா ?

(இ) அப்படியானல், என்ன காரணம் ?

(ஈ) உடனே அந்த வேலையைத் துரிதமாக முடிக்க அரசாங்கம் என்ன முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது ?

(உ) அந்த வேலை எப்போது பூர்த்தியாகும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The work was started on 5th February 1959.

(*b*) The work has been held up temporarily.

(*c*) Land acquisition proceedings in respect of the lands required for the execution of the new drainage course were in progress.

(*d*) The Revenue Divisional Officer, Mannargudi, has been asked to hand over the lands required by the Public Works Department immediately.

(*e*) About six months hence.

SRI A. VEDARATHNAM : 35 ஆண்டு காலமாக " பெண்டிங்காக " இருந்த வடிகால் வேலை துவக்கப்பட்டு இடையிலே அது நிறுத்தப்படக்கூடிய நிலைமை ஏற்படுவதற்குக் காரணம் என்ன ? நிலம் கொடுப்பவர்கள் தடை செய்த காரணத்திற்காக அந்த வடிகாலை வேறு மார்க்கமாக மாற்றி அமைக்கவேண்டிய நெருக்கடி அரசாங்கத்திற்கு ஏற்பட்டதா ? அதைத் தவிர்க்க அரசாங்கம் ஏதேனும் முயற்சி செய்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நிலம் " அக்வையர் " செய்யப்படாததால் தாமதம் ஏற்பட்டது. இப்பொழுது நிலம் " அக்வையர் " செய்யப்பட்டு உடனடியாக அந்த நிலம் " பப்ளிக் வொர்க்ஸ் டிபார்ட்மெண்டினிடம் " ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு 6 மாதத்திற்குள்ளாக இந்த வேலை முடிக்கப்படும்.

Salaries of teachers

*433 *Q.*—SRI K. R. VISWANATHAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the reasons for not disbursing the salaries of teachers of the Kattagaram Aided Elementary School in Udaiyarpalayam taluk;

(*b*) the period for which the teachers have not been paid; and

(*c*) the person responsible for the default and the action taken on him?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) The recognition of the school was withdrawn from 1st July 1959 for serious irregularities committed by the Management. The recognition was subsequently restored in April 1960. As the teachers had not

applied for Teachers' Service Registers in time and as the delay on the part of the teachers had to be condoned, the grant for the period from March 1959 to April 1960 has not been disbursed.

(b) From March 1959 to April 1960.

(c) The previous manager of the school. The question of taking action against him is under consideration.

Sri K. R. VISWANATHAN : இந்தப் பள்ளி அங்கீகாரம் ரத்தாவதற்கு முன், அதில் வேலை செய்த ஆசிரியர்களுக்கு அந்தக் கால வரைக்கு சம்பளம் கொடுக்கப்படவில்லை. இதிலே இருக்கிற புகார் என்னவென்றால் கல்வி அதிகாரிகள் அனாவசியமாக அந்த ஆசிரியர்களிடம் பகைமை கொண்டு அவர்களுக்கு சம்பளம் கொடுக்காமல் காலம் தாழ்த்திக்கொண்டு வருகிறார்கள். 1–3–1959 முதல் 1960-ம் ஆண்டு எப்ரல் வரை சம்பளம் கொடுக்கப்படாமல் இருப்பதாகத் தெரிய வருகிறது. உடனடியாக சம்பளம் கொடுப்பதற்கு முக்கியமாக ஜில்லா கல்வி அதிகாரிக்கு உத்தரவு பிறப்பிக்கப்படுமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : The arrears of Government grant due to the Management of the Kattagaram Aided Elementary School for the period from March 1959 to April 1960 have not yet been paid as the teachers have not applied for Teachers' Service Registers in time and as the question of giving condonation for the delay in applying for Teachers' Service Registers was under correspondence and the condonation has since been given. The District Educational Officer will now take necessary action for the payment of grant to the teachers if they are otherwise eligible.

Drinking water wells

* 434 *Q.*—**Sri S. M. ANNAMALAI** : கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

வட ஆற்காடு மாவட்டம், போளூர் தலூகா, படைவீடு, மதுரா, துரிஞ்சாபுரம், நம்மியந்தல் கிராமங்களில் குடி தண்ணீர் கிணறுகள் வெட்டும் விஷயம் எந்த நிலையில் உள்ளது ?

The Hon. Sri M. A. MANICKAVELU : The information is being collected and will be placed on the table of the House as soon as possible.

Sri S. M. ANNAMALAI : படைவீடு, மதுரா, துரிஞ்சாபுரம் கிராமத்தில் 52 அடி கிணறு வெட்டுவதைப்பற்றி ஏறத்தாழ 1½ ஆண்டு காலமாக கேள்வி கேட்டுக் கொண்டிருக்கிறேன். முதல் கேள்விக்கு பதில் சொன்னபொழுது ரூ. 5,000-க்கு திட்டம் போடப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். மறுபடியும் அதைப்பற்றி இரண்டாவது தடவை கேள்வி கேட்டபொழுது ரூ. 4,400-க்கு திட்டம் போடப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். மறுபடியும் மூன்றாவது தடவை கேள்வி கேட்டபொழுது ரூ. 3,400-க்கு திட்டம் போட்டிருப்பதாக பி.டி.ஓ விடமிருந்து தகவல் வந்திருக்கிறது. ஒவ்வொரு கேள்வி போடப்படும்பொழுதும் திட்டம் குறைந்து கொண்டே போகப்படுமா ? இந்தக் கிணறை வெட்டுவதற்கு சர்க்கார் முன்வரமாட்டார்களா ? ஏன் இவ்வளவு காலதாமதமாகிறது ? ஏன் திட்டத்தின் மதிப்பு குறைக்கப்படுகிறது ?

The Hon. Sri M. A. MANICKAVELU : இப்பொழுது இருக்கிற தகவலிலிருந்து சொல்லுகிறேன். பெரிய பெரிய கட்டிடத்திற்குக்கூட எஸ்டிமேட் மாறுவது உண்டு. இப்பொழுது இது "டெக்னிகல் சாங்ஷ